297

போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.

297

OFFICE OF THE REG...
18 JUL 1941
MADRAS



Editor & Publisher :

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

15 ஜூலை 1941 மலர் 1

...றை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

தனிப்பிரதி அணா 1¼.

3L
ஊ211, N11PP·
N41·321
182458

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	1
2.	சென்னை கல்வி இலாகா	4
3.	Result of the T.S.L.C. Examination (Higher Grade)	4
4.	கணித பாடம் கற்பிக்கும்போது கவனிக்கும் கற்பனைகள்	7
5.	வகுப்பில் ஆசிரியரும், மாணவரின் சுயாட்சியும் ...	10
6.	தமிழ்த்தொண்டு	12
7.	பாடக் குறிப்பு	13
8.	குழந்தைத் தன்மைப்பகுதி	16
9.	வேம்பும் அதன் பயனும்	18
10.	யோசனைக் கணக்கு விடைகள்	19
11.	ஈரோடு இளைஞர் கல்வி நிலையம் ஆரம்பப்பாடசாலை இரண்டாவது ஆண்டுவிழா	20
12.	பத்துப்பத்தாக நூறுவரை கூட்டல் (பாட்டு) ...	21
13.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	22
14.	பாலர் ஸங்கீதம்	23

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD	HALF PAGE Rs.	As.	Ps.	FULL PAGE Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Editor & Publisher :
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

ஏஜெண்டுகள் தேவை! ஏஜெண்டுகள் தேவை!!

போதனா விஷயப் பூங்கொத்து

OFFICE ... 18 JUL 194 MADRAS

கோத்து 32]   15 ஜூலை 1941   [மலர் 1

பத்திராதிபர் குறிப்புகள்

பூங்கோத்தின் புத்தாண்டு. சென்ற மாதத்தோடு நமது பூங்கொத்தின் 31-வது ஆண்டு நிறைந்து இந்த ஜூலை மாதத்திலிருந்து இதன் 32-வது கொத்து துவக்குகின்றது. இச்சந்தர்ப்பத்தில், நமது பூங்கொத்தை அன்புடன் ஆதரித்து வரும் நமது பழைய மாணவர்களுக்கும், ஏனைய பூங்கொத்து நேயர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துதலையும் கூறுகின்றோம்.

அன்றியும், இதுகாறும் நமது பூங்கொத்தை அபிமானித்துவந்ததுபோல், இனிமேலும் ஆதரித்து, சந்தாவைப் புதுப்பித்து, இன்னும் பல புதுச் சந்தாதார்களையும் சேர்த்து, பூங்கொத்தின் பயனைப் பலரும் எய்த உதவும்படி கோருகின்றோம்.

* * *

T. S. L. C. பரீட்சை **1941.** சென்ற மார்ச்சு மாதம் நடைபெற்ற எலிமெண்டரி ஹையர் கிரேடு பரீட்சை எழுதின எமது மாணவர்கள் வழக்கம்போல் திறமையாய்த் தேறியுள்ளனர். இவ்வருஷம் பொதுவாக எல்லா போதனாமுறைப் பாடசாலைகளிலிருந்து ஹையர்கிரேடு பரீட்சை எழுதியவர்கள் அநேகர் பரீட்சையில் தேறவில்லையென்பது விசனிக்கத்தக்கது. அநேக பள்ளிக்கூடங்கள் நூற்றுக்கு 30, 40, 50 வீதமே

தேறியிருக்கும்போது, நம் பாடசாலையில் நூற்றுக்கு 83 பேர் தேறியிருக்கிறது மெச்சத்தக்கது. முழு விபரம் மற்றொரு இடத்தில் காண்க.

இவ்வருஷம் மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற T. S. L. C. பரீட்சையில் முதன்மையாகத் தேறின செக்கண்டரி கிரேடு மாணவர் V. M. Maria Arul (Reg. No. 8708), எலிமெண்டரி ஹையர் கிரேடு மாணவர் M. Perianayagaswamy (Reg. No. 14431) ஆகிய இவ்விருவருக்கும் எமது சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், நம் பாடசாலைத் தினக் கோண்டாட்டத்தன்று இவர்கள் ஒவ்வொருவருக்கும் பேரன் பொறித்த வெள்ளிப் பதக்கம் ஒன்று வழக்கம்போல் அளிக்கப்படுமென்பதையும் அறிவிக்கிறோம்.

* * *

நமது பாடசாலை வருஷத் தியானம். வழக்கம்போல் நமது பாடசாலை வருஷத் தியானம் அடுத்துவரும் ஆகஸ்டு-மீ 12, 13, 14 தேதிகளில் நடைபெறும். அவ்வமயம் தியானம் செய்ய விரும்பும் நம் பழைய மாணவர்கள் தத்தம் விருப்பத்தை முன்னதாகவே இப்பாடசாலைத் தலைமை ஆசிரியர்க்கு எழுதித் தகவல் கேட்டுத் தெரிந்துகொள்ளக்கடவர்.

முக்கியமாய் போஜன வசதி முதலிய செலவுகளுக்காக நமது பழைய மாணவர்க்கென்று குறைந்த சார்ஜில் ஏற்பாடு செய்யப்படும்.

* * *

The Rural Centre and Industrial Institute, Mangalagiri. மங்களகிரி கிராம அபிவிருத்தி கலாசாலை. இஃது திருநெல்வேலி ஜில்லா, தூத்துக்குடிக்கு அதி சமீபத்தில் உள்ள மங்களகிரி எனும் ஸ்தலத்தில் ஏற்பட்டுள்ள ஓர் கலாசாலை. இங்கு கிராம புனருத்தாரண வேலைக்கு (Village reconstruction) உரிய சகலவிதப் பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது. அங்கு கற்றுக்கொடுக்கப்படும் கிராமத் தொழில்களில் பின்வருவன முக்கியமானவையாகும்: (1) நவீன விவசாய முறை. (2) கோழிப்பண்ணை வைத்தல். (3) தேனீ வளர்த்தல். (4) ஆடு மாடு வளர்த்தல்.

இவைதவிர முதியோர் கல்வி (Adult Education) விஷயமாயும், இன்னும் கிராம சுகாதாரம், பொருளாதார நிலை

182458

முதலிய காரியங்கள் விஷயமாயும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஷ கலாசாலையின் (1940—41) வருஷாந்தர ரிப்போர்ட்டு எம் பார்வைக்கு வந்தது. கிராம முன்னேற்ற விஷயமாய் ஷ கலாசாலை புரிந்துவரும் அரிய சேவையைப்பற்றி நாம் வெகுவாய் போற்றுவதோடு அதன் தலைவர் (Principal) ஸ்ரீ **J. L. P. Roche Victoria** அவர்களின் பெருமை திறமைகளை நாம் நன்கு பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். அக்கலாசாலை மென் மேலும் நம் தமிழ்மக்களின் முன்னேற்றத்திற்காக ஊக்கத்தோடு உழைக்குமாறு இறைவனை இறைஞ்சுகின்றோம்.

* * * * * * * * *

சங். கபிரியேல் கோமஸ் சுவாமியவர்களின் மரணம்.

சென்ற ஜூன் மீ 9-ம் தேதி திங்கட்கிழமை இரவு சங். கோமஸ் சுவாமியவர்கள் மரணமடைந்த செய்தி இங்கு எட்டியவுடன் அனைவரையும் துக்கசாகரத்தில் ஆழ்த்தியது. 1911-ம் வருஷத்தில் குருப்பட்டம் பெற்று இப்பாடசாலை காம்பௌண்டு மானேஜராக சுமார் 8 வருஷம் இருந்தனர். அப்போது இங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அர்ச். சூசையப்பர் அச்சு இயந்திர சாலை, தொழிற்சாலை இவற்றின் மானேஜராகவும், போதனு முறைப் பாடசாலையைச் சேர்ந்த அனுதப்பிள்ளைகள் மடத்தை விசாரிப்பவராகவும், போதனுமுறைப் பாடசாலை மானேஜராகவும் அந்தந்த ஸ்தாபனத்தின் முன்னேற்றத்தின்பொருட்டு வெகுவாய் உழைத்தவர். பின்னர், மதுரை பங்கு விசாரணைக் குருவாக சுமார் 21 வருஷம் தாம் இறக்கும்வரை இருந்து அரிய பெரிய சேவைகளைச் செய்தவர்.

தமது உதார குணத்தாலும் எளியவர்பால் இவர் கொண்டுள்ள அளவுகடந்த அன்பு இரக்கத்தாலும் அனைவரும் கொண்டாடும்படியான பேறுபெற்றிருந்தனர். விசேஷமாக இப் பாடசாலை அனுதப்பிள்ளைகள்மட்டில் இவர் செய்திருக்கும் தர்மங்கள் என்றும் மறக்கப்பாலனவல்ல. எனவே, இப்பாடசாலை காம்பௌண்டின் சார்பாக எமது முழு அநுதாபத்தை "பூங்கொத்து" வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு காலஞ்சென்ற அந்த நல்ல குருவானவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக மிகவும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

சென்னை கல்வி இலாகா

Proceeding of the Director of Public Instruction, Madras,
R. O. C. No. 6360-B/40, dated 10th June 1941.

ஷை சுற்றுத்தரவின்படி, பெண் பாடசாலைகள் இல்லாத ப்ரதேசத்தில் (ஒன்றுக்கு மேற்பட்டு) இரண்டு அல்லது மூன்று ஆண் பாடசாலைகள் இருப்பின், அப்பாடசாலைகளில் எல்லாம் படிக்கும் பெண் பிள்ளைகளின் தொகை எல்லாம் சேர்ந்து அப் பிரதேசத்தில் படிக்க வயது வந்துள்ள (School going age) பெண் பிள்ளைகளின் மொத்தத் தொகையில் 25 % இருந்தால் போதும். அதாவது இரண்டு அல்லது மூன்று பள்ளிக்கூடங்களில் படிக்கும் பெண் பிள்ளைகளின் தொகையையெல்லாம் சேர்த்து 25 % இருந்தால் போதும் என்று ஏற்படுகிறது.

R. C. Boarding and Training Institution, Trichinopoly

HIGHER ELY. GRADE RESULTS

(*Vide* Fort St. George Gazette Supplement dated 24th June 1941)

PASSES

Reg, No.	Name of Candidates	Percentage
14429	Emmanuel, S.	50
14430	Arul Francis, U.	47
14431	Perianayakaswami, M.	60
14432	Mariarethinam, M.	43
14433	S. Arpudaswamy	35
14434	S. Arokiasami	48
14436	S. Anthony Michael	49
14437	S. Amirthavasagam	35
14438	K. A. Mariadasen	41
14439	M. Lourdu	39
14440	M. S. Vedamuthu	40
14441	P. Salette	44
14442	M. Anthony	52
14443	R. Jaganathan	41
14445	R. Mudiappan	56
14446	A. Santhanaswamy	47
14447	S. M. Anthony	45
14448	K. R. Savarimuthu	46
14451	S. Pakkiaselvam	43

Reg. No.	Name of Candidates	Percentage
14452	S. Viagappan	35
14453	M. Arokiam	39
14454	M. Arokiam	36
14455	G. Maria Louis	45
14456	I. Viagappan	35
14457	S. Lourdusamy	51
14458	M. Raphael	39
14460	A. Devaraj Chinnappan	47
14461	P. Thavasy *alias* Savarinathan ...	40
14463	P. Yagappan	41
14464	S. Chinnappan	45
14465	M. Lourdu	49
14466	S. Viagulam	52
14467	S. Belevendram	36
14468	K. R. Irudayam	36
14469	A. Thomas	52
14470	S. Maria Singam	48
14471	S. Gnanapragasam	48
14472	C. Yagappan	52
14473	S. Santiago	38
14474	M. Rayappan	56
14475	V. P. Augustine	36
14477	S. Dorairaj	47
14478	M. Gnanasironmany	38
14479	M. Arulanandam	39
14480	M. Kandasami *alias* Gabriel	42
14481	S. Sebastian	48
14482	G. Wallace	36
14484	J. Victor Thiagaraj	43
14485	A. Pitchai	46
14486	S. Alexis	52
14488	A. Maria Susai	49
14489	M. Rajendram	47
14490	R. Arokiaswami	39
14491	S. Gnanapragasam	39
14493	S. Savarimuthu	36
14494	S. Visuvasam	34

Reg. No.	Name of Candidates		Percentage
14496	S. Rayappan ...	...	... 44
14497	S. Arulanandam ...	...	... 37
14501	Thomas Seeni ...	...	... 37
14502	M. Annasamy ...	...	... 53
14503	M. A. Arokiam ...	...	... 38
14507	M. Adaikalam ...	...	... 41
14508	A. Antonisami ...	1936–38	... 34
14662	Y. Santhanam ...	1935–37	... 39
14778	S. Divyanathan ...	1937–39	... 37
15206	M. Maria Rajaiah...	1936–38	... 39
15207	V. Maria Doss ...	1937–39	... 40

FAILURES

No.	Name of Candidates		Subjects Failed
14435	M. S. Santiagu	...	Geography
14459	A. Aseervatham	...	Do.
14462	D. Irudayaswami	...	Tamil
14476	M. Maria Thangayya	...	Geography
14483	N. Arokiasami	...	Do.
14487	G. Thangaraj	...	Do.
14495	S. Lourduswamy	...	Tamil
14498	S. Gregory	...	Ely. Mathematics.
14504	Baha *alias* Michaelsamy	...	Geography
14506	S. Sreenivasagam	...	Tamil

OLD STUDENTS

15205	S. Joseph	1938-40 ...	Ely. Mathematics
14777	L. Ignaci	1938-40 ...	Do.
14779	M. Arpudam	1932-34 ...	English
14780	S. Susai-manickam	1927-29 ...	Ely. Mathematics
14307	P. Adaikalam	1927-29 ...	Do.
14938	V. M. Jeganathan	1936-38 ...	Do.
14444	P. Ignacymuthu	...	More than two Subjects
14449	S. Antony	...	Do.
14492	K. G. Kulandaiswami	...	Do.
14500	M. Lourdusamy	...	Do.
14505	P. Krishnan	...	Do.

கணித பாடம் கற்பிக்கும்போது கவனிக்கும் கற்பனைகள்

(A. Antonimuthu.)

முதன் முதலில் கணித பாடத்தின் நோக்கம் கவனிக்கத் தக்கது. பிற்கால ஜீவியத்தில் கணக்கு விஷயங்களுக்கு வேண்டிய அறிவை யூட்டியும் மனோசக்திகளை உண்டாக்குவது. அதாவது வாழ்க்கைக்கு அவசியமான கணித அறிவைக்கொடுத்து ஞாயமாய் தர்க்கிக்கவும் திட்டமாயும் துல்லியமாயும் யூகிக்கவும் எவ்விஷயத்திலும் கூர்மையாயும் ஆழ்ந்தும் சிந்திக்கவும் திறமையுண்டுபண்ணல். மேற்கூறியுள்ள நோக்கத்தின் நன்மைகளை அடைய ஈண்டு எடுத்தோதப்படும் கற்பனைகள் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

1. **கணக்கு விதிகளையும் சூத்திரங்களையும் சரியாய் விளக்கிக் காண்பிக்கவேண்டும்.** ஆகையால் கூடியமட்டும் குழந்தைகளின் அனுபவத்திற்கு ஒட்டின கணக்குகள் மூலமே இவைகளை அப்பியாசம் செய்யவேணும். முதலில் பொருள்களை சம்பந்தப்படுத்திப்பின் பொருள்களின் சம்பந்தத்தை நீக்கி எண்களின் சம்பந்தத்தை நிர்ணயிக்கவேண்டும். பொருள்கள் உபயோகிக்க முடியாதபோது சித்திர விளக்கம் கையாடவேண்டும். போதிக்கும் விதிகள் எப்போதும் போதித்த பழைய விதிகளைப் பின்பற்றியிருத்தல் நன்று. எண்ணறிவைப் புலன்களின் மூலமாய் ஊட்டவேண்டும். இவற்றில் பார்வையும் ஸ்பரிசமும் முக்கியம். ஒவ்வொரு விதியும் நன்றாய்க் கற்பிக்கப்பட்ட பின்பே அடுத்த விதி போதிக்கலாம். ஒரு பாடத்தில் அதிகமாகக் கற்பிப்பது பயன்படாது. கொஞ்சங் கொஞ்சமாக விதிகளைத் தொகுத்துப் போதிக்கவும். படித்த விதியைத் திருப்பிப் பார்ப்பதற்குப் போதுமான அவகாசங் கொடுக்கவேண்டும். விதியை உபயோகிக்கப் பழகிக்கொடுக்கவேண்டும்.

2. **வாழ்க்கையில் வழங்கக்கூடிய கணக்குகளாக இருப்பது நலம்.** கீழ் வகுப்புகளிலிருந்தே கணக்குகள் வெறும் எண்களான தொகைகளாயிராமல் சாதாரணமாகக் கடைகளில் வழங்கும் கணக்குகளாக இருக்கவேண்டும். இவைகளும் தெளிவாகப் பிள்ளைகள் கண்டுபிடிக்கக்கூடியதாயும் அவர்களின் மனோசக்திகளை விருத்திக்கக்கூடியதாயும் இருப்பது நன்று.

கணக்குகள் ஒரே மாதிரி இல்லாமல் பலவகைப்பட்டதாயும் ஆலோசனையை எழுப்பக்கூடியவையாயும் இருத்தல்வேண்டும். பிள்ளைகளின் மனோநிலைக்குத் தக்க கேள்விகள் தொகுத்தெடுக்கப்படுதல் நல்லது. சுலபமான கணக்குகளிலிருந்து கஷ்டமான கணக்குகளுக்குப் படிப்படியாய் வருவது விரும்பத்தக்கது. ஒரே உண்மையைப் பல முறைகளில் எண்பிக்கவேண்டும். போதித்த விதிகளை சுலபமான கணக்குகள் கொடுத்துப் பரிக்ஷிக்கவேண்டும்.

3. **மனக்கணக்குகள் சரியானபடி பிரயோகப்படுவது நன்று.** ஒவ்வொரு பாடத்திலும் மனக்கணக்குகள் கொடுத்து விதியை வரவழைக்கவேண்டும். பின் கணக்கை எழுதிச்செய்வது பிரயோஜனமாகும். மனதால் கணிக்கக்கூடாதவற்றையே எழுதிச்செய்யலாம். மனக்கணக்கை எடுத்துக் கணக்கிலிருந்து பிரிக்கக்கூடாது. பொதுவாக எல்லாக் கணக்குகளையும் மனதாலேயே செய்யவேண்டும். ஆனால் எண்கள் பெரியவையாயிருந்தாலும் அல்லது அவற்றின் சம்பந்தம் கஷ்டமாயிருந்தாலும் அவற்றைக் கரும்பலகையிலோ அல்லது காகிதத்திலோ எழுதச்செய்யலாம். இப்படி எழுதிக்கொள்வதெல்லாம் மனதின் சௌகரியத்திற்காக என்பதை ஞாபகத்தில் பதிக்கவேண்டும். ஆனால் அவை மனதை விழுங்கிவிடக்கூடாது. அதாவது மனதில் செய்யக்கூடியவற்றை எழுதிச்செய்யக்கூடாது. கூடியமட்டும் மனதிலேயே கணக்குகளைச் செய்யப்பழகவேண்டும்.

4. **கணிதபாஷை சரியாய் திருத்தம் பெறவேண்டும்.** கூடிய வரை பிள்ளைகளுக்குக் கூட்டல் கழித்தல் முதலிய அடையாளங்களை உபயோகித்துக் காண்பிக்கவேண்டும். ஒவ்வொரு விதியையும் கற்கும்போதே அவ்வித சம்பந்தமான அடையாளத்தின் உபயோகத்தை அர்த்தத்துடன் விளக்கவேண்டும். கணக்கு விடைகளைப் பிள்ளைகளே வாசித்துப் பழகவேண்டும். கணக்குகளையும் கேட்டு எழுதிக்கொள்ளப் பழகவேண்டும். கணக்கைப் பிள்ளைகளை விட்டே திருத்தவேண்டும். ஒரு பிள்ளை தன் தப்பிதங்களை தானே கண்டு பிடிக்கச் செய்வது நலம். கணக்குச் செய்முறை தெளிவாய் எழுதப்பழகவேண்டும். இலக்கங்கள் சரியாயும் கணித இலக்கணம் தப்பிதமில்லாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

5. **கணித பாடத்தின் பரஸ்பர சம்பந்தம்** கணித பாடத்தை மற்றப் பாடங்களுடன் சம்பந்தப்படுத்திப் போதிக்க

வேண்டும். கரிய கிரகணங்கள் வஸ்துக்களின்மேல் பட்டு அவற்றை நமது பார்வைக்குள் எப்படிக் கொண்டுவருகின்றனவோ அப்படியே கணிதமும் மற்றப்பாடங்கள் எல்லாவற்றிலும் பரவி அவற்றை நன்ருய்த் தெளிவாக்குகிறது. ஆகவே கணிதத்துக்கும் மற்றப் பாடங்களுக்குமுள்ள சம்பந்தத்தைக் குறிக்கக்கூடியதும் துவக்கக்கூடியதுமான கணக்கையே கற்பிக்கவேண்டும். (உ-ம்) வாசக பாடத்தில் பசு என்ற பாடம் படிக்கும் போது அதன் கால்களெத்தனை அதன் உயரமென்ன எவ்வளவு பால் கொடுக்கும் முதலிய விஷயங்கள் கணித சம்பந்தமுள்ளவை. ஆகவே இவற்றைப்பற்றியும் கணக்குப் பாடத்தில் சொல்லவேண்டும். இப்படி பரஸ்பர சம்பந்தமுள்ள பாடங்களிலெல்லாம் பசுவைப்பற்றிப் படிப்பதில் அதைப்பற்றிய விஷயங்களெல்லாம் ஒரே மொத்தமாக மனதில் பதியும். அப்படியில்லாமல் வாசக பாடத்தில் ஒன்று கணித பாடத்திலும் இதரப் பாடங்களிலும் ஒன்றுமாகப் படித்தால் ஒரு விஷயமும் பூராவாகத் தெரியாமல் ஒவ்வொரு விஷயத்திலும் சிற்சில அம்சங்கள் மட்டும் படித்தாற்போலாகும். இது நான்கு குருடர்கள் யானையை வர்ணித்த கதைபோலாகும். எந்த விஷயத்தைக் குறித்தும் எல்லா அம்சங்களும் தெரிந்தவரைக் காண்பது அரிது. ஆகையால் ஒவ்வொரு பாடமும் ஒரே விஷயத்திலுள்ள ஒவ்வொரு அம்சத்தைத் தெரிவிக்கும். இவற்றையெல்லாம் சேர்த்து வரும் ஞானமே அவ்விஷயத்தையொட்டின பூரண ஞானமாகும். மேலும் இவ்வித பரஸ்பர சம்பந்த ஞானத்துடன் சொன்னல் கற்பிப்பது எளிதான முறையாகும். இயற்கைப்பாடம், விஞ்ஞான சாஸ்திரம், சித்திரம் இவைகளுடனும் கைவேலையுடனும் சம்பந்தமாக்கிவிடலாம்.

பேஷ்! நல்ல பதில்

அப்பா! நீங்கள் எனக்கு அரை ரூபாய் பணம் கொடுத்ததாக கனவு கண்டேன்.

தகப்பன் :—குழந்தாய்! இப்பொழுது நீ நல்ல பையனுகி விட்டாய்! அதை நீயே உன் செலவுக்கு வைத்துக்கொள்.

N. R. Thiruvengadam, S. 2.

வகுப்பில் ஆசிரியனும், மாணவரின் சுயாட்சியும்

Class Master and Pupils' Self-discipline

(V. M. Maria Arul.)

பேராசிரியனின் முக்கிய தொழில் கற்பித்தல் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். ஆனால் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தம்மைப்பற்றியும், சுற்றியுள்ள அனந்தங்கோடி ஜீவராசிகளைப்பற்றியும், இடையே யேற்பட்டுள்ள சம்பந்தத்தை யும்பற்றி யோசிக்கக்கூடிய திறமையை உண்டாக்குதலே முக்கிய தொழில் என்பதை கலைஞானிகள் கூறியிருக்கின்றனர். இப் பேர்ப்பட்ட பெரும் வேலைக்கு இடம் ஒவ்வொருவனுடைய மன மும், அஸ்திவாரம் சுயஆட்சியும், காலம் பள்ளிக்கூட ஜீவிய நாட்களென்று தெரிகின்றது.

பிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்களைத்தான் அடக்கியாண்டு கொள்ளக்கூடுமா என்பது பெரிய கேள்வி. முடியாது என்பது ஒரே நிச்சயமான பதில். காரணங்களை ஆராய்ந்து பார்ப்பின், பாலர்களுக்குப் போதிய ஞானம் இன்னும் வளரவில்லை. அனு போகமும் சொற்பமே. ஆகையால் ஞானம் வளரக்கூடிய பள் ளிக்கூட ஜீவியத்தில், தடங்கல்களை நீக்கி, நன்மைகளைக் குறை வின்றியடைய, ஆசிரியனின் அனுபோகமும், கண்டிப்பும் அவசி யம். கண்டித்துத் திருத்தும் விஷயங்களில் ஆசிரியர் அறிய வேண்டுவன பலஉள. சிலவற்றை ஆராய்வோம்.

பாலர்கள் குற்றம் பல புரிகின்றனர். குற்றமென்று தெரிந்து, பிறர்க்கு நஷ்டமும் கஷ்டமும் விளைவிக்கவேண்டு மென்று, பாலருள்ளத்தில் துரோகங்கள் இவ்விள வயதில் அநேக மாக உதிக்காது. மற்றோர்க்குத் தீமையில்லாச் சிறிய குற்றங் களால் ஏற்படும் கஷ்டங்கள் பல உண்டு. முளையிலே கிள்ளி யெறியாவிட்டால், இக் களைகள் அதிக துன்பங்களுக்குக் காரண மாகும். ஆகையால் அறியாமல் புரியும் குற்றவாளிகள்மேல் பரி தாபமும் அனுதாபமும் காட்டுவது நல்ல ஆசிரியனின் முதல் லக்ஷணமாம்.

பிள்ளைகளுக்கு சுய ஆட்சியையும், தங்களைப் பற்றிய நினைவு மூட்டவேண்டுமானால், பிள்ளைகள் செய்யும் குற்றங்களை, அவர் களே உணரச் செய்யவேண்டும். உணர்ந்த பிறகு தண்டனை

கொடுத்தால் குற்றங்கள் வெகு சுலபமாகத் திருத்தப்படும். ஆசிரியரிடையே நேசப்பான்மை வளரும். மாணவர் இதோ தங்களையே திருத்திக்கொண்டனர். சுயாட்சி!

வகுப்பில் வீண் கூச்சலிடுவதும், அநாவசியமாகத் திட்டுதலும், அடாத தண்டனை கொடுத்தலும் வகுப்பின் மனப்பான்மையைப் பிளக்கச் செய்கின்றன. இரு கக்ஷி. கடைசியில் தோல்வியடைதல் அப்படிப்பட்ட ஆசிரியன்தான். பிள்ளைகள் ஆசிரியர்மேல் இதுகாறும் கொண்ட வணக்கம் மறைந்து, பதிலாகக் கீழ்ப்படியாமைபோன்ற துர்வழக்கங்கள் உதிக்கின்றன. அந்தோ! அவ்வாசிரியனும் இராதிருந்தால் நலமாம்.

வகுப்பில் பொதுவாக, கண்ணியமாகத் துலங்கவேண்டுமானுல் ஆசிரியன் பிள்ளைகளை வேறு வழியாகவும் திருத்தலாம். உற்சாக மூட்டுதல் மற்ருெரு வழி. உங்களில் சிலர் மிகவும் நல்ல பிள்ளைகள். கஷ்டப்பட்டு படிக்கின்றீர்கள். மற்றவர்களுக்கு ஞான தீபங்கள். இவரின் முன்மாதிரிகையை மற்றவர்களும் கண்டுபாவித்தல் கஷ்டமல்ல. சில வேளைகளில் ஏதோ தெரிந்தும் தெரியாமல் தப்பிதம் செய்து வருகிறீர்கள். நல்ல பிள்ளைகளென்று எல்லோரும் பெயரெடுக்க வேண்டாமா? இதோ இன்றுமுதல் இப்படியிப்படி நடந்து கொள்ளுவோம் என்று தன்னையும் சேர்த்துக்கொண்டு ஆசிரியனும் உற்சாக மூட்டினுல் பிள்ளைகளின் அனுதாபம் எங்கேபோகும்? ஏன் வகுப்பு மேன்மையடையாது? ஏன், வெகு சீக்கிரம் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்களையே திருத்திக்கொள்ள மாட்டார்களா? உபாத்தியாயரின் எண்ணம் இனிது முடிவுபெறுவது ஆச்சரியமல்ல! இதோ பிள்ளைகள் தங்களைத்தான் அடக்கிக் கொண்டார்கள். சுயாட்சி.

தப்பித்து ஓடும் பையனை ஓடிப் பிடித்து அடிப்பர் சிலர். இப்படி ஒருகாரியம் போதும். பிள்ளைகளின் எளனத்திற்கு சுதந்திரவாளியாக வேண்டியதுதான். இதுதான் இவர் வள்ளல் என்று உடனே கூறத்தொடங்குவர் மாசற்ற மாணவர்கள். ஏன் கௌரவத்தோடு நடந்துகொள்ள வழியில்லையா? உடனே தண்டனை கொடுத்துவிட வேண்டுமா? ஒரு பார்வை, ஒரு சொல் கொண்டு பிள்ளைகளை அடக்க, அவர்களைத் திருத்த வல்லமைகொண்ட ஆசிரியனே நல்லாசிரியனு

செய்யப்படும் குற்றங்களை இல்லுக்கவேண்டுமே யொழிய தெரிந்தும் தெரியாமல் குற்றங்கள் புரியும் பாலர்கள்மேல் அன்

182458

தாபமும் புன்சிரிப்பும் கொள்ளவேண்டும். ஒரு கையால் அடித்தாலும் மறுகையால் அணைத்தாலல்லோ, ஆசிரியன்மேல் நல்லெண்ணம் ஏற்படும். குற்றங்களும் வகுப்பில் குறையும். பிள்ளைகள் தங்களையே உணர்வர். சுயாட்சியைக் கடைப்பிடிப்பர். கலைஞானிகளின் எண்ணமும் நிறைவேறும். பாலர்கள் தம்மைப்பற்றியும், தம்மைச் சுற்றியுள்ளதும், சம்மந்தப்பட்டதுமான சக்தியைப்பற்றி யோசிக்கத் தலைப்படுவர். இதுவே ஆரம்பக்கல்வியின் அடிப்படையும் கதியுமாம்!

தமிழ்த் தொண்டு

(ஆசிரியர் M. S. சுந்தரேச அய்யர், R. C. T. School, திண்டிவனம்)

தமிழ்ச்சுவை தனிச்சுவை

செந்தமிழ் நாட்டில் தோன்றிச்
செந்தமி ழிடை வளர்ந்து
செந்தமி ழிழிவென் றோதும்
சீரிலாப் பரத நாட்டீர்!
செந்தமிழ்ப் புலவர் யாத்த
செய்யுளில் வழிந்து வீழும்
செந்தமிழ்ச் சுவையை மாந்தித்
திவ்யநா டாக்கு வீரே— (1)

அறிவு நூலின் அவசியம்

சாத்திர வேத மெல்லாம்
சாற்றிய நெறியைப் பற்றி
நீர்த்திரை யுலகில் வாழும்
நேர்மைசேர் பரத நாட்டீர்!
நாத்திகக் குழியில் வீழ்ந்து
நலிந்துயர் நீங்கா முன்னர்
ஆத்தும நூலை யோதி
அன்பு நாடாக்கு வீரே— (2)

பாடக் குறிப்பு

(R. Pitchai Pillai.)

வகுப்பு : V. பாடம் : தமிழ். பாகம் : எழுத்து வியாசம்.

நேரம் : 40 நிமிஷம். நோக்கம் : "தமிழனும், துருக்கனும்" என்ற கதையை மாணவர் தொடர் வாக்கியங்களில் தொகுத்து வியாசமாக எழுதப்பழகுதல்.

உபகரணம் : கரும்பலகை, நோட்டுப்புத்தகம்.

பீடிகை : மாணவருடன் சம்பாஷித்து "தமிழன், துருக்கன்' என்பவைகளின் கருத்தை வரவழைத்து ஒரு தமிழனையும் ஒரு துருக்கனையும் பற்றிய கதையை எழுத்து வியாசமாக எழுதிப் படிப்போமென நோக்கத்தைக் கூறி பாடத்தை ஆரம்பிக்கவும்.

விஷயம்	முறை
	வகுப்பிற்கேற்ற பாஷையில் உற்சாகத்தோடு ஆசிரியர் விஷயத்தில் காட்டியுள்ள கதையை இருமுறை சொல்லுதல்.
	அப்பால் மாணவருடன் சம்பாஷித்து கீழ்கண்டபடி ஏற்ற கேள்விகளின் மூலம் கதையை வாய்மொழியாய் வரவழைத்தல் :—
தமிழனும் துருக்கனும் ஒரு நாள் ஒரு தமிழன் வேறொரு ஊருக்கு குதிரையின் மேலேறிச்சென்றான். நடு வழியில் குதிரையை விட்டிறங்கி அதை ஒரு மரத்தடியில் கட்டி விட்டு பக்கத்திலிருந்த குளக் கரையில் சாப்பிட ஆரம்பித்தான்.	ஒருநாள் ஒரு தமிழன் என்னசெய்தான்? நடு வழியில் அவன் செய்தது யாது?

விஷயம்	முறை
அவ்வழியே வந்த ஒரு துருக்கன் தனது குதிரையை தமிழன் குதிரைக்கருகே கட்டினான். துருக்கனுடைய குதிரை இளைத்து மெலிந்திருந்ததால், தன்னுடைய பொல்லாத குதிரைக்கருகே கட்டவேண்டாமென்று தமிழன் தடுத்துச் சொன்னான். துருக்கன் தமிழன் வார்த்தைகளைக் கேட்கவில்லை.	அவ்வழியே வந்த ஒரு துருக்கன் செய்த காரியங்களை விவரி.
சிறிதுநேரத்தில் இரு குதிரைகளுக்கும் சண்டை ஏற்பட்டது. தமிழனுடைய குதிரை துருக்கனுடைய குதிரையை உதைத்துக் கடித்துக் கொன்றுபோட்டது.	தமிழனுடைய வார்த்தைகளைத் துருக்கன் மீறியதால் அவனுக்கு நஷ்டம் ஏற்பட்டதை விளக்கு.
இறந்த குதிரையின் நஷ்டத்தைப் பெற, தமிழனை துருக்கன் நியாயாதிபதியினிடம் இழுத்துச் சென்றான். விசாரணை நடந்தது.	இறந்த குதிரையின் நஷ்டத்தைப் பெற துருக்கன் செய்தது என்ன?
விசாரணையில் தமிழன் மௌனமாயிருந்ததால் அவன் ஊமையென நியாயாதிபதி எண்ணினார். அப்போது துருக்கன் குளக்கரையில் தமிழன் தனக்குத் தடுத்துச் சொன்னவைகளைக் கூறி அவன் ஊமையல்ல என்று தெரிவித்தான்.	நியாயாதிபதியினிடம் நடந்த விசாரணையைப்பற்றிக் கூறு.
இதைக் கேட்ட நியாயாதிபதி இறந்த குதிரையின் நஷ்டத்தைக் கேட்பது சரியல்ல என்று கூறி இருவரையும் அனுப்பிவிட்டார்.	நியாயாதிபதி எவ்வாறு தீர்ப்புச்செய்தார்?
நாம் வீண்வாது செய்யலாகாது.	இக்கதையிலிருந்து அறிய வேண்டிய நீதி யாது?

விஷயம்	முறை
	பின்னர் மாணவர்களில் சிலர் கதையைத் தொடர்ந்து சொல்லும்படி செய்தல். அப்பால் ஆசிரியர் கரும்பலகையில் வியாசத்தை மாதிரியாக எழுதிக்காட்டுதல். இறுதியில் மாணவர் எழுத்து வியாசமாக தங்கள் நோட்டுப்புத்தகத்தில் எழுதுதல்.

க. ப. சு. :—விஷயத்தில் காட்டியபடி ஆசிரியர் கரும்பலகையில் எழுதும் மாதிரி வியாசம்.

பரீக்ஷை :—மாணவர் எழுதிய வியாசங்களை ஆசிரியர் பரிசோதனை செய்து, தவறுகளைத் திருத்துதல்.

விடுகவி

(M. Mariarethinam, H. M. R. C. School, Pushpavanam)

பெருவாய் கொண்டிருக்கு மொரு பூதமல்ல
பெயர்த்துண்ட வழிகக்கும் வௌவாலல்ல
நிருவாக முடன் பாயும் புலியுமல்ல
நேர்கணக்கு மறிவிக்குங் கணக்கனல்ல.
ஒருவாமற் போர்க்களம் போம் வீரனல்ல
உதவிசெய்வார் கைபார்க்கும் அகதியல்ல
திருவாரு மரச முத்திரை பெற்றிருக்குந்
தேசாதிபதியல்ல செப்புவீரே!

குழந்தைத் தன்மைப் பகுதி

'என் மயில் குட்டியைக் கொன்றுபோட்டானே!'

N. R. திருவேங்கடம், S. 2.

'சார், சார், என் மயில் குட்டியைக் கொன்றுபோட்டானே! அதன் வயித்தில் இருந்த குட்டி கூட நசுங்கிப்போயிருக்குமே!' என்று அலறிக்கொண்டு ஓடிவந்தான் அழகர்சாமி.

'மயில்குட்டியா? ஏதடா அது? எவ்வளவு நாளாக அதை வளர்க்கிறாய்?' என்று கேட்டார் ஆசிரியர் ரங்கநாதம் ஆச்சரியத்தோடு.

'ஆமாஞ் சார், அதை காவடிக்காரன்கிட்டெ வாங்கி ஆறு மாஸமா வளர்த்திக்கிட்டு வாரேன், இப்போ குட்டிபோடப்போற சமயத்திலே இப்பிடி மிதிச்சுப்போட்டானே! வயத்திலே இருந்த் குட்டிகூட நசுங்கிப்போயிருக்குமே!' என்று கூறி விம்மி விம்மி அழுதான் அழகர்.

'டேய்! அழகர்! நீ தினமும் பள்ளிக்கூடத்திற்கு வந்து விடும்போதெல்லாம் உன் மயிலை யாரடா பார்த்துக்கொள்வது?'

'நான் அதை ஒரு நிமிஷங்கூட பிரிஞ்சிருக்கமாட்டேன் சார்! பள்ளிக்கூடத்திற்கு வர்ரப்போகூட என்கூட்வே கொண்டு கிட்டுதான்சார் வருவேன்.'

'என்னடா, இது! எனக்குக்கூடத் தெரியாமல் எவ்வளவு சாமர்த்தியமாக மயில் வளர்த்திருக்கிறாயே!'

'அது ஒருத்தருக்குமே தெரியாது சார்! தெரிஞ்சா யாராச்சும் கொன்றுபோடுவாங்கோன்னுதான் தெரியாமெ வளத்தஞ் சார்! அது இப்போ போச்சே, என்ன செய்வேன்?' என்று கூறி மீண்டும் மீண்டும் அழுதுகொண்டேயிருந்தான்.

'நான் அதை விசாரிக்கிறேன் அழாதே' என்று தேற்றினார் ஆசிரியர். ஆனால் அவனோ அழுகையை நிறுத்துவதாய் இல்லை.

'அழாமெ இருந்தா மயில்குட்டி வந்திடுமா சார்! அது போச்சே, நான் எப்படி சும்மா இருப்பேன்!' என்று கூறிக் கொண்டே அழுதான்.

'சரி, அப்பா! அழகர்! உன் மயிலைக் கொன்றவன் யார்?' என்று கேட்டார் ஆசிரியர்.

'பொன்னநதாஞ் சார் உம், உம், உம்' என்று ராகம் இழுத்தபடியே கூறினான்.

ஆசிரியர் ரங்கநாதம் பொன்னனை அழைத்து அவனைக் கண்டித்து தண்டித்து அனுப்பினார். ஆனால் அழகரின் முகாரியோ

நின்றபாடில்லே. பார்த்தார் ஆசிரியர், இந்த தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வது?

'டேய், அழகர்! உனக்கு வேறே மயில் தருகிறேன், நீ அழாதே' என்று தேறுதல் வார்த்தை கூறினர்.

'நீங்க கொடுக்கிற மயில் இப்போ குட்டி போடுமா சார்? வயத்திலே குட்டியோட இருந்த மயில் செத்துப்போச்சே!' என்று கூறி, தன் முகாரியை மேல் ஸ்தாயியில் திருப்பிவிட்டான்.

'கிணறு தோண்ட பூதம் புறப்பட்ட கதை'யாக ஆசிரியர் செய்வதறியாது திகைத்தார்.

'அழகர், அந்த மயில் எங்கே? கொண்டுவா பார்க்கலாம்' என்ருர் ஆசிரியர்.

அழகர் தன் புத்தகத்தை எடுத்துவந்து அதைத் திறந்து காட்டினன்.

'பூ! இந்த மயிலிறகாடா மயில் குட்டி? ஏண்டா, இதற்கு உயிர் இருக்கிறதா?' என்று கேட்டார்.

'உயிரில்லாமெ எப்பிடி ஸார் குட்டி போடும்? இன்னம் ரெண்டு மூணு நாள் போனல் நாலஞ்சு குட்டி இருக்குமே! என்று அங்கலாய்த்தான் அழகர்.

'உனக்கு யாரடா சொன்னூர்கள் இது குட்டி போடு மென்று?' என்று கேட்டார் ஆசிரியர்.

'அந்தக் காவடிக்காரன்தான் சார் சொன்னன்' என்ருன் அழகர்.

அச்சமயம் மணியடித்தது, அழகர் முகாரி பாடிக்கொண்டே வீடு சென்ருன். அவன் அழுகையை ஆசிரியரால் நிறுத்த முடிய வில்லே.

மயில் இறகை உண்மையான உயிருள்ள மயில் என்று பையன் நினைத்து, அதற்கு உயிர் இருப்பதாகவும், குட்டிபோடு மென்றும் கருதினன். ஒரே உறுதியாகவும் இருந்தான். அத ஞல் அவனைச் சமாதானப்படுத்த முடியவில்லே.

வாசகர்களே, நீங்கள் மனேசாஸ்திரம் வாசிக்கிறீர்கள் அல் லவா? அப்படியானல் பையன் ஏன் இறகுக்கு உயிர் இருப்ப தாக நினைத்தான் என்று கண்டுபிடிக்கலாம் அல்லவா? எங்கே கண்டுபிடியுங்கள்?

இச்சம்பவம் நான் என் நண்பரான ஆசிரியர் ஒருவரைக் காணச்சென்ற சமயம் ஒரு கிராமப் பள்ளிக்கூடத்தில் உண்மை யாக நடைபெற்றதாகும்.

வேம்பும் அதன் பயனும்

G. Susaimarian, (Old student)

நம் தாய்நாட்டின்கண் உள்ள எல்லா மரங்களிலும் நமக்குச் சகல வழியிலேயும் உபயோகமான மரம் வேப்ப மரமாகும். அம்மரத்தின் உபயோகங்களாவன :

1. இம்மரத்தின் இலையை அம்மை கண்டவர் படுக்கையி லிட்டாலும், புண்களில் அரைத்துப் பூசினும் வைசூரிக் கிருமி கள் இறந்துபோம்.

2. புஸ்தகங்கட்கு இடையே இவ்விலைகளை வைப்பின் புஸ்தகங்களைப் பூச்சி நாசஞ்செய்யா.

3. குழந்தைகள் பிறந்த வீட்டினுள் இவ்விலைகளைப் போடுவதனால் அங்குள்ள நச்சுக்காற்றிலுண்டாகும் வியாதி நீங்கும்.

4. வேம்பின் இளந் தளிரை உண்பதனால், வயிற்றுவலி யும், பசியின்மையும் நீங்கும்.

5. காய்ந்த வேப்பிலைப் பொடியைத் தணலில் தூவின் கொசுக்கள் வரா.

6. இத்தழை பசுந்தாள் உரமாகிறது.

7. வேப்பம் இலையிலிருந்து சோப்புச் செய்யலாம்; இது தோலிற்கு மெதுவும், வனப்பும் கொடுக்கிறது.

8. இவ்விலையிலிருந்தும், பூவிலிருந்தும், பச்சடி, குழம்பு, துவையல் செய்து, நெய்யில் வதக்கி உணவோடு உண்ணலாம். இது வாயுவைக் கலைக்கும்.

9. இவ்வெண்ணெய், ஜன்னி, க்ஷயம், வாதம் நீக்கும்; நோய்கட்கு வெகு பிரயோஜனமானது.

10. இவ்வெண்ணெய் விளக்கு எரிக்கவும், பலகாரம் செய் யவும் உதவும்.

11. இவ்வெண்ணெயை மாட்டுக்குளம்பு புண்ணிலும், மற்றுமிடமுள்ள புண்ணிலும் போட சீக்கிரம் ஆறும்.

12. வேம்பின் கொட்டையிலிருந்து எண்ணெயும், பிண் ணாக்கும் கிடைக்கிறது. பிண்ணாக்கு எருவிற்கு உபயோகப் படுகிறது.

13. வேம்பினின்றிறக்கிய நீர் கொடுங்குஷ்டத்தையும், அழுகிய புண்ணையும் நீக்க சக்திவாய்ந்துள்ளது.

14. இதன் பட்டையிலிருந்து கசா என்ற மருந்து செய்யலாம்.

15. இதன் குச்சி பல் துலக்க உதவும், அதனுல் பல் உறுதிக்கும், வாய் நாற்றம் நீங்கவும் ஏதுவாகிறது.

16. இதனடிமரம், வீட்டுவேலைக்கு உதவும், கரையான் அரியா. மற்ற கொப்புகள் விறகிற்கும், மேழிகுத்தி முதலியவற்றிற்கும் பிரயோஜனப்படுகிறது.

17. இம்மரம் அதிகமாயுள்ள இடங்களில் சுர ரோய் வரா.

18. இம்மரங்களின் நிழலும் அதினின்று வரும் காற்றும் தேக சௌக்கியத்திற்கு ஏற்றதாகிறது.

யோசனைக் கணக்கு விடைகள்

(கொத்து 31, மலர் 12, பக்கம் 332.)

விடை :—ஒரு பக்கத்தில் நின்றவர்கள் **7** பேர் ; மற்றொரு பக்கத்தில் நின்றவர்கள் **5** பேர்.

ஷை விடையளித்தவர்கள் :—

(1) K. Srinivasan (Sec. Grade.)
(2) George Sydney (Sec. Grade.)
(3) P. Manickam *alias* Susaimanickam (Elem. Grade.)
(4) S. M. Jebamalai, Thengilipatti.
(5) S. Viagula Sesudian (Elem. Grade.)

பரவாயில்லை.

ஜெயில் உத்தியோகஸ்தர் :—உன்னை ஒரு மாதத்திற்கு முன் விடுதலை செய்திருக்கவேண்டும், தவறுதலாக ஒரு மாதம், கூட ஆகிவிட்டது.

கைதி :—அதனுலே பரவாயில்லிங்க, அடுத்ததடவை ஒரு மாசம் முந்தியே விட்டுட்டா சரியாப் போயிடறது.

ஈரோடு இளைஞர் கல்வி நிலையம் ஆரம்ப பாடசாலை இரண்டாவது ஆண்டு விழா

(R. P. தங்கவேலு, மானேஜர், தலைமை ஆசிரியர்).

4-4-41 இன்று மாலை 4-30 மணிக்கு விழா ஆரம்பிக்கப்பட்டது. இக்கூட்டம் மகாஜன ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீமீனாட்சிசுந்தர முதலியார், B.A., L.T., அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. மேலும் ஈரோடு ரேஞ்சு சீனியர் டெப்யூட்டி இன்ஸ்பெக்டர் திருவாளர் P. H. வெங்கட்ராவ், B.A., L.T., அவர்களும், லண்டன் மிஷன் பிராஜக்டு போதனமுறை பாடசாலை பிரின்ஸிபால் Rev. H. A. பாப்லி துரை அவர்களும், மற்றும் வேறு முனிசிபல் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களும், பெரியோர்களும் கூடியிருந்தனர்.

கடவுள் வணக்கத்திற்குப்பிறகு இப்பாடசாலையின் சென்ற ஆண்டு அறிக்கையை ஷை பாடசாலையின் மானேஜரும், தலைமை ஆசிரியருமான ஸ்ரீ R. P. தங்கவேலு அவர்களால் வாசிக்கப்பட்டது. பின்பு இப்பாடசாலையின் சிறுவர்களால் சாரணச் சிறுவர் விளையாட்டும், சிறுமிகளால் கும்மியும் கோலாட்டமும், அழகாக நடத்தி காண்பிக்கப்பட்டது. மிகுந்த கரகோஷத்தினிடையே, தலைவருக்கும், முக்கிய சொற்பொழிவாளர்களுக்கும் பூமாலைகள் சூடப்பட்டன. பிறகு "பெற்றோர் சங்கம் இன்னதென்பதைப்பற்றி" ஸீனியர் டெப்யூட்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ P. H. வெங்கட்ராவ், B.A., L.T., அவர்கள் தெளிவாக எடுத்துக்கூறினர். பெற்றோர் சங்கம் ஒன்று அவ்வமயம் நிறுவப்பட்டது. Rev. H. A. பாப்லி அவர்கள் "கல்வியின் அவசியமும் பெற்றோர் கடமையும்" என்பதைப்பற்றி நீண்டதோர் பிரசங்கம் செய்தார். ஸ்ரீமதி R. அன்னப்பூரணி அம்மாள் "பெண்கள் முன்னேற்றம்" என்ற தலைப்பின்கீழ் எளிய நடையில் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார். கடைசியாக இக்கூட்டத்தின் அக்கிராசனர் தன்னுடைய பின்னுரையில் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்குமுள்ள சம்பந்தம் இன்னதென்றும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைத்தாலொழிய படிப்பு முன்னேற்றமடையாது என்று பல திருஷ்டாந்தங்களுடன் எடுத்துக் காட்டினர்.

இறுதியாக தலைவர் அவர்கட்கும், கனம் இன்ஸ்பெக்டர் அவர்கட்கும் மற்றும் விஜயம்செய்த ஏனைய பெரியோர்கட்கும்,

கனதனவான்களுக்கும் ஷ பாடசாலை மானேஜரும், தலைமை ஆசிரியருமான ஸ்ரீ R. P. தங்கவேலு அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத்தினருக்கு சந்தனம், கற்கண்டு வழங்கப்பட்டது.

பத்துப் பத்தாக நூறுவரை ஏற்றிக் கூட்டல்
(பாட்டு)

(S. அந்தோனி, உபாத்தியாயர், (பழய மாணவர்) பசும்பலூர்.)

பத்தும் பத்தும் இருபது, பாட்டிச் சோறு தருவது.
இருபதும் பத்தும் முப்பது, எருது வண்டி இழுப்பது.
முப்பதும் பத்தும் நாற்பது, முத்து (ச்சரம்) மாலை கோர்ப்பது.
நாற்பதும் பத்தும் ஐம்பது, நாகன் சோறு தின்பது.
ஐம்பதும் பத்தும் அறுபது, அம்மா முத்தம் தருவது.
அறுபதும் பத்தும் எழுபது, அப்பா நிலம் உழுவது.
எழுபதும் பத்தும் எண்பது, எழுத்தை நித்தம் காண்பது.
எண்பதும் பத்தும் தொண்ணூறு, (நான்) உண்பது நித்தம் பால்சோறு.
தொண்ணூறும் பத்தும் நூறு, தோழனே நீ கூறு.

கூட்டல் பாட்டு

அரையும் அரையும் ஒன்று, (ஆற்றங்) கரையில் மேயும் கன்று.
ஒன்றும் ஒன்றும் இரண்டு, ஊர்ந்து போகும் வண்டு.
இரண்டும் இரண்டும் நாலு, நொண்டிக்கொரு காலு.
மூன்றும் மூன்றும் ஆறு, மொந்தன் வாழைத் தாறு.
நான்கும் நான்கும் எட்டு, நாகன் கையில் லட்டு.
ஐந்தும் ஐந்தும் பத்து, (எம்) அத்தையிடம் சொத்து.

குறிப்பு:—மேற்கூறிய பாட்டுகளை அவரவர்கட்கு இசைந்தபடி பாடக் கற்பிப்பதுடன், பாட்டுக்கேற்ற எண்களுடனும், சித்திரப் படங்களுடனும் கற்பிக்கலாம்.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

7—6—41. கோடை விடுமுறை கழிந்தபின், இன்று பாடசாலை தொடங்கலாயிற்று. தொடங்குமுன் இப்பாடசாலை ஆசிரியர்களும், மாணவ ஆசிரியர்களும், மாதிரிப்பாடசாலைப் பிள்ளைகளும் சபாமண்டபத்தில் ஒன்றுகூட, சங். தலைமை ஆசிரியர் அவர்கள், கடந்த பரீட்சை முடிவைப்பற்றி ப்ரஸ்தாபித்து, பரீட்சை தேறின சகல மாணவர்களுக்கும், தேருதவர்க்கும் புத்திமதி கூறி, ஆசிரியர்களும், மாணவர்களும் மென்மேலும் உழைத்து முன்னேற்றம் அடைய வேண்டிய அவசியத்தை எடுத்துச்சொல்லி, வகுப்புகளைத் தொடங்கச் செய்தனர்.

* * * *

29—6—41. இன்று மாலை ஆசிரியர் சங்கக்கூட்டம் சங். தலைமை ஆசிரியர் அவர்களின் தலைமையின்கீழ் கூடியது. அவ்வமயம், புதிதாக போதனு பயிற்சிக்குச் சேர்க்கும் புது மாணவர்களின் ப்ரவேசப் பரீட்சை நடத்தும் விஷயமாய் பற்பல ஒழுங்குகளைத் தலைமையாசிரியர் அவர்கள் எடுத்துக்கூறினர். அன்றியும் ஆசிரியர் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய அலுவல்கள் இன்னவை என்றும் திட்டம் செய்யப்பட்டது.

* * * *

30—6—41. இன்று காலை ப்ரவேச பரீட்சை நடத்தப்பட்டது. சென்ற வருஷத்தைப்போல் இவ்வருஷத்திலும் ஷை பரீட்சை எழுதினவர்கள் பலர். பரீட்சை முடிந்த பிறகு வைத்திய சோதனையும், தலைமை ஆசிரியரின் மேற்பார்வையும் நிகழலாயின. பின்னர் செக்கண்டரி கிரேடுக்கும், எலிமெண்டரி க்ரேடுக்கும் தேவையான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சட்டென்று பதில்

உபாத்தியாயர் :—திப்பு சுல்தான் எந்த சண்டையில் இறந்துபோனர்?

பையன் :—அவர் போட்ட கடைசி சண்டையில் சார்.

D. Maria Joseph, S. 2.

பாலர் ஸங்கீதம்

A. Gnanadickam, *Music Teacher*,

St. Joseph's Higher Elementary School, Ootacamund.

நீதிபோதனை : ஜீவகாருணியம் சிபி சக்கரவர்த்தி கதை. பாட்டுடன் கதை சொல்லக் கற்பித்தல்; 4, 5-ம் வகுப்பு.

குறிப்பு :— அடியிற்கண்ட விஷயங்களை க. ப.-வில் எழுதி சிறுவர்களை ஒருவர் பின் ஒருவராக தெளிவாய் வாசிக்கச் செய்தல்.

ஆசிரியர் ராகத்துடன் பாடலைப் பாடி பாலர்களையும் அவ்விதமே பல தடவைப் பாடும்படி செய்து, வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொருவருக்குக் குறித்துக் கொடுத்துத் தெளிவாய் அவர்களைச் சொல்லச் செய்தல்.

பாலர்களின் தராதரத்திற்கு ஏற்றவாறு வாக்கியங்களை கூட்டியும் குறைத்தும் ஒரேவிதமாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

இராகத்தில் கடினமான பிரயோகங்களை முடியுமானால் சேர்த்துக்கொள்ளலாம். இக்கதை மூன்று மாத மலரில் தொடர்ந்து வரும்.

சங்கராபரணம் 29. ஆதி. + = ப்ரதிமத்திமம்.

(பஜனைசெய்வோம் கண்ண நாமம்)

பாடலும் ஸ்வரமும் :

ரீரீ மாமா பாபா பாபா + மா ; பா ; மகரிம கரிஸா
மனு முறை தவ றுசெங் கோ ; லன் ; சி . . . . . . பி
ரீரீ மாமா பாபா பாபா + மா ; பா ; ;; ;;
மனு முறை தவ றுசெங் கோ லன் ; ;; ;;

அனுபல்லவி :

; ததா ததா தா ; தாதா தநிஸ்ரி ஸ்ாநீ தநிதநி பாபா
; மகிழ் ஜீவ கா ; ருணி ய . . . குண மு . . . டையோன்
; பா தாபா மாகா ரீஸா ஸரிகா ரிகமா கமபா மகரிஸ
; மா நகர் கா . சியாண் டா . . . . ன் அ..க்கால்
(மனுமுறை)

வாக்கியங்கள் :—

1. வெகு காலத்துக்குமுன் சிபி சக்கரவர்த்தி காசிமா நகரை ஆண்டுவந்தார்.
2. அவர் தரும நூல்களை நன்றாக ஓதி உணர்ந்தவர்.
3. மனுமுறை தவறு செங்கோலோச்சுந் திறமைவாய்ந்தவர்.
4. ஜீவகாருணியச் சிந்தை மனதில் மிகுதியாக்கொண்டவர்.

சரணம் : 1.

; பஸ்ா ஸ்ஸ்ா ஸ்ாஸ்ாஸ்ா ; ; நீ, நீஸ்ாநீதாபா ;
; ஒரு தினம் மா. லை ; ; வே, ளைசிங்கா.ர ;
; நிநீ நிஸ்ா நீதா பாமா கமபா மபதா பதநிஸ் நிதப
; வன மர சனஉ லவுங் கா . . . . ல்

; ரிஸ்ா ஸ்ஸ்ா ஸ்ாஸ்ா ஸ்ா ; ; நீ , நிஸ்ா நீதா பா ;
; ஒரு தினம் மா . லே ; ; வே ; ளேசிங்கா . ர ;
; நிநீ நிஸ்ா நீதா பாமா கமபத பா ; ; ; ; ;
; வன மர சன்உ லவுங் கா . . . ல் ; ; ; ; ;
; ரிமா மமா மாமா மா ; ; கமா பதா தாதா தா ;
; பருந் தால்ப யந் . து ; ; பத றிய வெண்பு ரு ;
; பபா தபா மாகா ரீஸா ஸரிகா ரிகமா கமபா மகரிஸ
; பா . ர்த்திபன் கரம் தங் . க . . . .

(மனுமுறை)

5. ஒரு நாள் மாலை வேளையில் அரசர் தன் அரண்மனை சிங்காரத் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார்.

6. அச்சமயத்தில் ஆகாயத்தில் பருந்தினல் துரத்தியடிக்கப் பட்ட புருவொன்று களைப்புடன் பறந்து வந்து அரசன் கரத்தில் தங்கினது.

7. அரசன் ஆச்சரியமடைந்து அன்புடன் :—

சரணம் : 2.

; பஸா ஸஸா ஸா ; தா ; நீஸா ரீரீ ரீ ; ரீ ;
; தட விய ணேத் ; து ; சர ணடை யுன் ; னே ;
காமா பாதா நீ ; நீஸ்ா நீஸ்நி தாநித பா ; ; ;
தா . ஞெரு போ ; துமுன் ப . . கை . . வர் ; ; ;
; நிஸ்ா ர்ரீ ரீ ; ரீ ரீ ஸ்ரிக்ப் ம்ாக்ா ரிக்ரிக் ஸ்ாஸ்ா
; இடம் விடேன் என் ; செல்வம் எ . . . ல்லாமி ழ . . . க்கினும்
; நிநீ ஸ்ஸ்ா நீதா பாமா கமபா மபதா பதநிஸ் நிதபா
; இசை யேனு னேயி ழக்க எ . . ன் . . . . ருன்
; நிநீ ஸ்ஸ்ா நீதா பாமா கமபத பா ; ; ; ஸாஸா
; இசை யேனு னேயி ழக்க என் . . ருன் ; ; ; அக்கால்

(மனுமுறை)

8. அரசன் மிகுந்த அன்புடன் புருவை மார்போடு அணைத்துத் தயையுடன் அதனை உற்று நோக்கி, "நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை.

9. உன்னைக் காப்பாற்றும் விஷயத்தில் என் செல்வமெல்லாம் இழக்கும்படி நேரிட்டாலும் நான் பின்னிடமாட்டேன்.

10. இன்னும்; அடைக்கலம் புகுந்தவர்களைக் கைவிடக்கூடாதென்பதே என்னுடைய கொள்கை" என்றுரைத்தார்.

11. அவ்வார்த்தைகளைச் செவியுற்ற புரு, சந்தோஷத்துடன் இருக்கும் சமயத்தில், அதனைத் துரத்திக்கொண்டுவந்த பருந்தானது தன் இரையாகிய புரு தப்பிப் போய்விட்டதே என்ற கவலையால், கோபத்துடன் சக்கரவர்த்தியின் அருகே வந்து தைரியத்துடன் சொன்னதாவது (தொடரும்).

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
182438

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற
சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு ... 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்னாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு... 0—6—0
4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
   1 முதல் 5 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
   6 முதல் 8 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
South Indian Music School, St. Thomas Church Rd.,
OOTACAMUND.

"ஆரம்பக்கல்வி"

சுமார் 5 வருட காலமாக ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கு உழைத்துவரும் ஓர் மாதாந்தரப் பத்திரிகை.

இதில் பாடசாலைகள் சம்பந்தமான அரசாங்க உத்தரவுகள், டைரெக்டர் சுற்றறிக்கைகள், கெஜட்டில் பிரசுரமாகும் கல்வி சம்பந்தமான செய்திகள், ஆசிரியர்களுக்கு மிக்க உபயோகமான பொதுச் செய்திகள், கட்டுரைகள் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 1—0—0. மாதிரிப் பிரதி இனும்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ், 94, 95, புதுத்தெருவு, மண்ணடி, மதராஸ்.

DRILL BOOKS

சிறந்த சிறு விளையாட்டுகள்! உயர்ந்த விஷயங்கள்!!
ஆங்கிலத்திலும் எளிய தமிழ் நடையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன!!!

ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு
இன்றியமையாதது
"PRINCIPLES AND GAMES"

(2 தனி புத்தகங்கள்)

துரைத்தனத்தாரின் சீர்திருத்த முறைப்படி புதுப் பாடத் திட்டத்திற்கேற்ற விளையாட்டுகளும், தேகப்பயிற்சிகளும், நவீன அபிநய விளையாட்டுகளும், (விவரணப்படங்களுடன்) அடங்கியுள்ளன.

இரு புத்தகங்களும் சேர்ந்து ரு. **1-8-0**-க்குக் கொடுக்கப்படும். தபால்கூலி பிரத்தியேகம். ஒரே தடவையில் 6 செட் புத்தகங்களுக்கு மேல் வாங்குகிறவர்களுக்கு தபால்கூலி இனும். 12 செட் புத்தகங்கள் வாங்குகிறவர்களுக்கு 1 செட் புத்தகம் இனும்.

ஏஜெண்டுகள் தேவை:
தக்க கமிஷன் உண்டு.

விலாசம் :—**Mr. V. M. JOSEPH,**
Author and Publisher,
R. C. Secondary Training School,
TRICHINOPOLY.

Reg. No. M. 1354.

THOMAS SPORTS

[Pro: I. PONNIAH PILLAI]

CLIVE'S HOUSE, TEPPAKULAM P. O.,

TRICHINOPOLY



OFFICIAL STOCKISTS FOR

SLAZENGER'S Ltd.

LONDON.

The CHEAPEST HOUSE FOR

Spalding Australian Dunlop American Fulcrum & Japan

TENNIS FRAMES

WE UNDERTAKE

RE-STRINGING REPAIRING

RE-SHAPING & REGLUEING

WE MANUFACTURE THE BEST & GUARANTEED

NETS, BADMINTON BALLS IN ANY COLOUR IN ANY WEIGHT

A TRIAL IS SOLICITED

Your best Selection may be made at our Show Room.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.